ஆன்மீகச் சிற்றிதழ் (14)

# சிவனொளி




ஆசிரியர்

திருமலை சுந்தா

10/-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தன்னடக்கத்தில் நீண்டதொரு பயிற்சியே வாழ்க்கை

அட்டைப்படம் : சிசு



அன்பு செய்
ஆனந்தித்திரு


# சிவனொளி

172, பிரதான வீதி, திருக்கோணமலை

சிற்றிதழ் -14

2010 - ஐப்பசி


### இதழில்....


- மோனமென்பது ஞான வரம்பு
- இலிங்கோற்பவர்
- ஆசாரம் கடைப்பிடிப்போம்
- மண்டப வாசல்
- கொள்ளிச்சட்டி தேவைதானா?
- பற்றின்மை
- எல்லா உயிர்களும் இறைவனுடைய கோயில்களே
- கோகருணர் கதை


**நற்றுணையாவது நமசிவாயவே**

## ஆசிரியரின்....

சிவனொளி சிற்றிதழ் - 14 உங்கள் கரங்களில், உங்கள் ஆன்மீக சிந்தனைகளுக்கு, 'எம் அன்பான வாசகர்களே'.

ஆன்மீகம், மானுட வாழ்வின் உண்மையினை, உறுதியான, இறுதியான, மகிழ்ச்சியினை, தரவல்லது.

மனம் பற்றி 'மோனமென்பது ஞான வரம்பு' பக்கத்தில் கூறப்பட்டுள்ளது.

வழமைபோல சிவனொளி தொடர்ந்து வெளிவரும். உங்களின் கடிதங்கள் எல்லாவற்றையும் பிரசுரம் செய்தாலேயே பல ஆன்மீக இதழ்கள் உருவாகிவிடும்.

இவைகள் கடிதங்கள் அல்ல. அவற்றினை ஆன்மீக சிந்தனைகளாகவே கருதுகின்றோம். நன்றிகள்.

அடுத்த இதழில் பேசுவோம்.


அச்சு: அஸ்ரா பிரிண்டர்ஸ்
திருக்கோணமலை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோனமென்பது ஞான வரம்பு

'மோனமென்பது ஞான வரம்பு' மௌனமென்பது ஞானத்தையடைய வழி என்பது பொருள். இவ் எளிய வாக்கியத்தினை அருளியவர் ஔவையார். இன்று மோனம் அல்லது மௌனம் பற்றிப் பலர் பலவிதமாக கருத்துக்கள் கொண்டுள்ளனர். இவ்மோனமாகிய மௌனம் எவ்வளவு சிறந்த இனிய வாழ்க்கைக்கு முதன்மையாக இருக்கிறது என்பதை இக்கட்டுரையில் காண்போம்.

மௌனம் அல்லது மோனம் என்றால் சும்மாயிருப்பது. சாதாரணமாக ஒருவன் வாய்பேசாமல் இருந்தால் அவன் மௌனமாயிருக்கின்றான் என்று கூறுவது உலக வழக்கம். சத்துவம், இராசசம், தாமசம் ஆகிய முக்குணங்களில் இது சத்துவ குணத்தைச் சார்ந்தது. ஆனால் பேசாமல் மட்டும் இருந்தால் 'ஞானம்' வந்துவிடுமா? அப்படியிருந்தால் ஊமைகளெல்லாம் ஞானிகளாக வேண்டுமென்றோ! சந்நியாசிகள், துறவிகள் இவர்களில் சிலர் வாயால் பேசாமல் அவசியமாக வெளியிட வேண்டிய எண்ணங்களை எழுதிக் காட்டுவதுண்டு.

இத்தகையோர் ஒரு காரிய சித்திக்காகக் குறித்த காலம் வரையில் மௌனவிரதத்தை அனுஷ்டிப்பார்கள். அதனால் அவர்களிடம் அதிகமாகப் பேசுவதற்கு இடமில்லாமற் போகிறபடியால், அவர்களது மனம் நாட்டபட்ட நிலையினின்று சலிக்காமலிருக்க உதவுகிறது. ஆயினும் இவை பூரண மௌனமாகாது. கீழ்க்கண்ட மூன்றுவித மௌனங்களடங்கியதே பூரண மௌனம். அதுவே ஞானிகளிடையும் மௌனம்.

1. வாக்கு மௌனம்: வாய்திறந்து எதையும் பேசாதிருத்தல்.

2. காஷ்டமௌனம்: அவையங்களால் ஒரு வேலையும் செய்யாதிருத்தல்.

3. மனோ மௌனம்: மனத்தால் எதையும் சிந்திக்காதிருத்தல்.

ஒரு காரியம் நடக்க வேண்டுமாயின் மனம், இந்திரியம், புலன் மூன்றும் சேர்ந்தே நடக்கவேண்டும்.

இந்த மூன்றில் மனம் முதலில் ஒன்றை நினைக்க வேண்டும். பிறகு இந்திரியத்தின் உதவி கொண்டு புலன் வழியாய் வெளி விஷயங்களை உணர்ந்து கருமேந்திரியங்களால் செய்கிறது. மனம் நினைக்காவிட்டால் ஒரு காரியமும் நடவாது. ஆகையால் மனோ மௌனமே ஞானத்திற்கு முக்கிய சாதனமாக முதற்படியாக திகழ்கின்றது. மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணங்களாலும் நம் கருமங்களைச் செய்கிறோம். மனதால் நினைப்பதாலும், வாக்கால் வசனிப்பதாலும், காயத்தால் ஒன்றைச் செய்வதாலும் பாவ புண்ணியங்களைச் செய்கிறோம். மனம் அடங்கிவிட்டால் கன்மமே ஒழிந்துவிடும் மனம் சஞ்சலமற்று இருக்கும்போது அமைதியாக (சத்துவகுண) இருக்கிறது. மனதின் உருவநிலையே தன் இரோஜ தாமத குணங்களாம். அருவ நிலையே சத்துவ குணம். மனோலயம் அடைந்த ஞானிகள் ஈசுவரார்ப்பணமாகக் கனவு காண்பது போல் காரியங்களைச் செய்தாலும் அவர்களுக்கு கர்மம் உண்டாகாது.

மனமொடுங்கினால் ஆன்மாவானது தன்னைத்தான் அறிய முற்படுகிறது. இதனையேதான் ஔவையார் மிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எளிமையான வார்த்தைகளில் மோனமென்பது 'ஞானவரம்பு' என அழகாகத் தெளிவாகக் கூறியுள்ளார்கள். இதனால் மௌனமென்பது ஞானத்தை அடைய வழி பிறக்கிறது என்பதைத் தெளிவாக உணர்த்துகிறார்.

எது மவுனம்?

மனம் உள்ளும் வெளியும் ஆகிய இரண்டு வழிகளில் தொழில் செய்கிறது. வெளியில் இந்திரிய வாயிலாக புறம் போந்து விஷயங்களில் பிரவேஷிக்கிறது. உள்ளே மனோராஜ்யம் செய்கிறது. ஒவ்வொரு சமயம் வெளி விஷயங்களைக் கவனிப்பதை விட்டு அதாவது மனதில் ஒன்றும் சிந்திக்காமல் சற்று நேரம் சும்மா இருக்கிறோம். அப்போது அருகிலுள்ளோர் பேசுவதும் நமக்குக் கேட்காது. எதிரில் ஒருவர் செல்வதும் நமக்குத் தெரியாது. ஏனெனில் மனம் எந்த இந்திரியத்தோடும் சம்பந்தப்பட்டாலும், எதையும் சிந்திக்காமலும் இருக்கிறது. அதுவே மௌனமாகிய நிலைமை. ஒரு தடாகத்தில் நீர் கலங்கி அலைகள் வீசிக் கொண்டிருக்கையில் அத்தடாகத்தின் அடியில் என்ன இருக்கிறதென்று தெரியாது. அத்தகைய தடாகத்தைப் போன்றது சலனத்தோடு கூடிய மனம்; அதாவது சத்துவ குண மாத்திரமாக நின்ற மனம் அலையற்ற தடாகம் போன்றது. அப்போது அதன் அடியிலுள்ளது தோன்றும்: மனதின் அடிப்பாகமே அது உதிக்குமிடம். இதை வைத்தே மெஸ்மரிசம், ஹிப்னாடிசம் என்ற முறையில் நோயாளிகளை மயக்க நிலைக்கு கொணர்ந்து பல நோய் நீக்க முறைகளையும், பல உண்மைகளையும் இதில் கைதேர்ந்தவர்கள் செய்வதை அறிகிறோம். மனம் எங்கிருந்து உதிக்கின்றது என்று நோக்க ஆன்ம தரிசனம் உதயமாகும். ஏனெனில் ஆன்மாவில் இருந்தே மனம் உதிக்கின்றது. சிலர் மனதையும் ஆன்மாவையும் ஒன்றுபடுத்திக் கூறுவர். ஆன்மா வேறு, மனம் வேறு. எளிமையாகக் கூற வேண்டுமானால் ஆன்மா எல்லாவற்றிற்கும் சாட்சியாக இருந்து என்றும் அழியாமல் இருக்கக் கூடியது. மனமோ நல்லதை செய்யவும் தீயதை செய்யவும் உதவியாக இருக்கும்.

தாயுமானவர் மனதை நோக்கி 'நின் சன்ம தேயத்தில் நீ செல்லல் வேண்டும்' என்றார். ' அதாவது மனமே நீ எங்கிருந்து முளைத்தாயோ அங்குப் போய்ச் சேர்' என்றார். இன்னும் அம்மகானே.

என்னிடம் சித்த மவுனம் (உறுதியான மனம்) உதித்தால் என் சித்தம் செய்கை, வாக்கு யாவும் மௌனமாகும். அதாவது மனம், வாக்கு, காயம் மூன்றும் மௌனம் பின்பு மனம் தூய்மையாகிறது. மனம் தூய்மையடையும்போது வாக்கு, காயம் தூய்மையடைகிறது என்பது பொருள்.

இந்த மௌன நிலையை அடைவதற்கு ஆசை ஒழிய வேண்டும். எல்லாரும் ஏக காலத்தில் இதனை அடைந்துவிட முடியாது. மனம் ஒரே சிந்தனையில் நிற்பதே கடினம். சதா ஒரு சிந்தனை விட்டு இன்னொரு சிந்தனையில் தாவி அலைந்து கொண்டு இருப்பதுதான் அதன் இயல்பான குணம். மனதை பற்றிக் குரங்கிற்கு ஒப்பிட்டுக் கூறுவர்.

ஆகையால் முதலாவது ஆசையை கொஞ்சம் கொஞ்சமாக அடக்க வேண்டும்; மனம் இச்சா சொரூபம். இச்சையை ஒழித்தால் மனமடங்கும்; அதோடு மனதை முதலில் குறித்த ஒரு சிந்தனையிலேயே நிறுத்திப் பழக வேண்டும். அதற்கே சகுணோபாசனை வைக்கப்பட்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக போகத்திலிருக்கும் விருப்பத்தை உபாசனா மூர்த்தியிடம் செலுத்தி (அதுவே பக்தி என்பது) மனதை அங்கு நிறுத்திப் பழக வேண்டும். அதில் திடப்பட்டு அநுபவம் முதிர முதிர மனவொடுக்கம் சித்திக்கும். இது மிகக் கடினமாயினும் சாத்தியமானதே. சும்மாயிருப்பதுவே கஷ்டம் இது சோம்பலல்ல. இதில்தான் மனம் பூர்ண சுறுசுறுப்புடன் வேலை செய்கிறது. மனதை அதன் விருப்பப்படி விட்டுவிட்டு அதன்பின் அலைவது கஷ்டமல்ல. ஒரு குதிரையை அதன் மனம் போனபடி முரட்டுத்தனமாய் மேடு பள்ளம் பாராது பாய்ந்தோடும்படி விட்டுவிடுவது கெட்டிக்காரத்தனமுமல்ல; கஷ்டமுமல்ல; அதன் கடிவாள வாரை இழுத்துப்பிடித்து அதை அடக்கி நிறுத்துவதே கடினம். அப்படிச் செய்பவனே சாமர்தியவான். மனதை அடக்கி ஆளக் கற்றவனே உண்மையான வீரன். நம் முன்னோர்கள் இச்சக்தியாலே திரிகால ஞானிகளாக; வியக்கும்படியான காரியங்களைச் செய்தார்கள்.

மனதை அடக்குவதற்கு முன் நம் ஐம்புலன்களை அடக்க வேண்டுமென்பதை வள்ளுவர் பல அதிகாரங்களில் தம் எளிய குறட்பாக்களால் எடுத்துரைக்கின்றார். வேறுபல நூல்களும் மனதை அடக்க வழிகளைக் கூறியுள்ளன. அவர்களது புராண வரலாறுகளையும், அருள் மொழிகளையும் இங்கு விரிப்பின் பெருகும். மனமது செம்மையானால் மந்திரம் தேவையன்று' எனவே நாம் அனைவரும் மனதை அடக்குதற்குரிய எளிமையான வழிகளை கண்டு உணர்ந்து மனதை அடக்கி அறத்தை மேற்கொண்டு வாழ்க்கையில் உண்மையான, உறுதியான, இறுதியான மகிழ்ச்சியினைப் பெறுவோமாக.

●

# இலிங்கோற்பவர்

அடிமுடி தேடிய வரலாறு அனைவரும் அறிந்த ஒன்று. திருமாலும், பிரமனும் தாமே பெரியவர் என்று தமக்குள் சச்சரவு செய்து கொண்டிருந்தனர். அச்சமயம் வானவெளியில் ஜோதிலிங்கம் ஒன்று தோன்றியது. எல்லையற்று மேலும் கீழும் நீண்டிருந்த அச்சோதிலிங்கத்தின் முடியினைக்காண பிரமன் அன்னப்பறவையாகி மேல்நோக்கிப் பறந்து சென்றார். ஆயிரம் ஆண்டுகள் அரியும் அயனும் முயன்றும் ஈசனின் அடிமுடியினைக்காண இயலவில்லை. திருமால் தனது இயலாமையைக் கூறி ஜோதிலிங்கத்தை வணங்கி நின்றார். ஆனால் பிரம்மன் சிவபெருமானின் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் புறப்பட்டுக் கீழே வந்து கொண்டிருந்த 'தாழம்பூ' வினை பொய்ச்சாட்சி கூற அழைத்துவந்து "முடியினைக் கண்டேன்" என்று பொய்யுரைத்தார்.

திருமால் செல்வத்திற்கு அதிதேவதையான இலக்குமியைத் தன் மனைவியாகப் பெற்றவர். பிரமன் கல்விக்கு அதிதேவதையான சரஸ்வதியை துணையாகக் கொண்டவர். அவ்விருவரும் ஆயிரம் ஆண்டுகள் முயன்றும் இறைவனின் அடிமுடியினைக் காணமுடியவில்லை.

செல்வத்தினாலும் கல்வியினாலும் ஆயிரம் ஆண்டுகள் முயன்றாலும்கூட இறைவனை அறியமுடியாது என்பதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கதையின் உட்கருத்தாகும். பணம் படைத்தவன் தன்னால் இயன்ற அளவு முயன்றுவிட்டுத் தன் தோல்வியை உணர்ந்து வாளாவிருந்து விடுவான். ஆனால் கல்வியாளன் தனது தோல்வியினை ஒத்துக்கொள்ள மனமின்றி ஏதாவது சான்று ஒன்றினைத் தேடிப் பிடித்து மீண்டும் தனது கருத்தினையே வலியுறுத்த முயல்வான். கல்வியின் அதிதேவதையினைத் துணைவியாகக் பெற்ற பிரம்மதேவன் தாழம்பூவினைச் சான்றாக அழைத்து வந்தான் என்பது இதனையே உணர்த்துகிறது.

லிங்கங்கள் ஐந்து விதம்.
சுயம்பு லிங்கம் – தானே தோன்றியது.
கான லிங்கம் – தேவ கணங்களாலே தாபிக்கப்பட்டது.
தைவிக லிங்கம்– விஷ்ணு முதலிய தேவர்களால்தோற்றி வைத்தது.
ஆரிஷ லிங்கம் – ரிஷிகள் அசுரர்களால் தாபிக்கப்பட்டது.
மானுட லிங்கம்– மனிதர்களால்

ஜோதிலிங்கமாக நின்ற பெருமான் பின்னர் தனது திருவுருவினைக் காட்டி அருளினார். இலிங்கத்திலிருந்து தோன்றிய அக்கோலத்தினை 'லிங்கோற்பவர்' என்கிறோம். சிவாலயங்களில் இறைவன் சந்நிதியின் பின்புறத்தில் "லிங்கோற்பவ மூர்த்தி"யைக் கற்சிலையாக வடித்திருப்பதைக் காணலாம். இலிங்கத்திற்குள் காட்சிதரும் சிவபெருமானின் வடிவுடன் கீழ் பன்றி உருவில் திருமாலும், மேலும் அன்னப்பறவை உருவில் பிரமனும் காட்சி தருவர். மேற்பகுதியில் தாழம்பூவும் இடம் பெற்றிருக்கும்.

திருவண்ணாமலையே மேற்கண்ட வரலாறு நடைபெற்ற இடமாகும். மற்றும் பன்னிரெண்டு ஜோதிர் லிங்கத் தலங்களும் உண்டு.

'அபிதான சிந்தாமணி' லிங்கோற்ப மூர்த்திக்கு மற்றொரு விளக்கம் தருகிறது. இறைவன் லோகமூர்த்தியாக அமர்ந்திருந்தபொழுது அவனது திருமேனியிலிருந்து தோன்றிய வேர்வைத் துளிகள் ஒவ்வொன்றும் சிவலிங்கமாக ஆயிற்று. அவையே பின் பல தலங்களிலும் ஸ்தாபிக்கப்பட்டன. இவ்வாறு லிங்கங்கள் உற்பத்தியாக மூலமாய் அமர்ந்த மூர்த்தியே லிங்கோற்பவர் என்பது அவ்விளக்கம்.

திருஞான சம்பந்தரின் ஒவ்வொரு பதிகத்திலும் ஒன்பதாவது பாடலில் அடிமுடி தேடிய வரலாறு குறிப்பிடப்படுவதைக் காணலாம். "மாலறிய நான்முகனும் காண மலையினை, நாம் போல் அறிவோம்" என மணிவாசகரின் பாவைப் பெண்கள் கூறுவர். அதாவது இருவரும் காண இயலா இறைவனை பக்தியால் காணலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசாரம் கடைப்பிடிப்போம்

1. தீர்த்த யாத்திரைக்கு போகும்போது, குடை, பாதரட்சை வாகனம், பல்லக்கு, டோலி முதலியவைகளில்லாமல் போக வேண்டும்.
2. ஞாயிறு, செவ்வாய், வியாழன், வெள்ளி, பிரதமை, விஷ்டி, ஸப்தமி, அஷ்டமி, கொதசி, துவாதசி, சதுர்தசி, அமாவாசை, பூர்ணிமா, உத்தரம், கேட்டை, திருவோணம், திருவாதிரை, ஸங்க்ரமணம், ஜன்மரஷத்திரம், வ்யதீபரதம், ஆசௌசம், இவைகளில் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்யக்கூடாது.
3. துரஸ்திரீகள் ஒருவருக்கு ஒருவர் தொட்டுக்கொள்ளக்கூடாது.
   புருஷ சிசுவானால் 30 தினங்களுக்குப் பிறகும், ஸ்திரி சிசுவானால் 40 தினங்களுக்குப் பிறகும் மாதாவிற்கு பாண்டஸ்பர்ச் யோக்யதை உண்டாகும்.
   தர்மத்தை நினைத்தவுடனே செய்யவும் கன்றுக்குட்டியின் கயிற்றை தாண்டக்கூடாது.
4. ஈர வஸ்திரத்தை ஏழு தடவை உதறினால் அது உலர்ந்த வஸ்திரத்திற்கு சமமாகும்.
5. எந்த கிரஹத்தில் தினந்தோறும் மெழுகுவதும், கோலம் போடுவதும் செய்யப்படுகிறதோ அங்கே லஷ்மி புண்ணிய பலத்துடன் வசிக்கிறாள்.
6. மாற்றுக்கு மறுதலை விவாஹம் கூடாது. சிசுக்கள், ரோஹிஷ்டர்களுக்கு காலதோஷம் இல்லை.
7. ஞாயிற்றுக்கிழமையில் புஷ்பத்தையும், செவ்வாய்க்கிழமையில் மண்ணையும், வியாழக்கிழமையில் அருகையும், வெள்ளிக்கிழமையில் கோமயத்தையும் சேர்த்துக்கொண்டால் வாரதோஷம் இல்லை. தைலங்களுக்கும் திதி தோஷமில்லை.
8. தீபத்தின் சுடர், எண்ணை, பஸ்மம் இவைகளைக் கையால் தொடக்கூடாது. தொட்டால் ஸ்நானம் செய்யவேண்டும்.
9. பிரதக்ஷிணம், நமஸ்காரம், தேவபூஜை, ஹோமம், ஜபம், இவைகளை உத்தரீயத்தை இடுப்பில் கட்டிக்கொண்டே செய்யவேண்டும்.
10. உபநயனம் ஏற்படுதற்கு முன் பாலர்களுக்கு விதி நிஷேதங்கள் கிடையாது.
11. இரும்பு பாத்திரம், உடைந்த பாத்திரம் உபயோகப்படுத்திய மண்பாத்திரம் இவைகளில் சிராத்தத்திற்கு சமையல் செய்யலாகாது.
12. ஸ்திரீகள் செய்யும் சிராத்தங்கள் எல்லாவற்றிற்கும் ஹோமம் கிடையாது.
13. பஞ்சகவ்ய திரவ்யங்களில் கோமூத்திரத்தில் வருணனும், சாணத்தில் அக்னியும், தயிரில் வாயுவும், பாலில் சந்திரனும், நெய்யில் சூரியனும் இருக்கிறார்கள்.
14. உபநயனத்திற்கு முன் பாலன், விவாஹத்திற்கு முன் பெண் இவர்கள் சதா சுத்தர்கள்.
15. புத்ரனும், தகப்பனும் ஒரே நாளில் க்ஷௌரம் செய்துகொள்ளக் கூடாது.
16. பார்வண சிராதத்தில் போஜனம் செய்த தோஷத்திற்காக மறுநாள் 108



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயத்ரீயாவது ஜபிக்க வேண்டும்.

17.ஜீவ பித்ருகன் செய்யும் சிராத்தத்திற்கு அங்கதர்ப்பணம் கிடையாது. இளம் வெய்யிலில் காயக்கூடாது. பிணப்புகை மேலே படக்கூடாது.

18.நகம், மயிர் இவைகளை கிள்ளக்கூடாது, துரும்புகளை கிள்ளக்கூடாது.

19.ஸ்தயத்தையே சொல்லவேண்டும். பிரியத்தமாகவே சொல்ல வேண்டும். ஸ்தயமானாலும் அப்பிரியத்தை சொல்லக்கூடாது. பிரியமானாலும் சத்தியமில்லாததை சொல்லக்கூடாது.

20.புருஷர்கள்தீபத்தை அணைக்கக் கூடாது. ஸ்திரீகள் பூசணிக்காயை உடைக்ககூடாது.

21.தட்டிலும் ஏகாதசி விரதம் உண்டு.

22.சூரியகிரஹணத்திற்கு முன் 4யாமம் சாப்பிடக்கூடாது. சந்திரகிரஹணத்திற்கு முன் 3 யாமம் சாப்பிடக்கூடாது.

23.இரும்புப் பாத்திரத்தில் தீர்த்துமும், தாம்பரப் பாத்திரத்தில் பாலும், ராத்திரியில் தயிரும் பகலில் பாலும், கையினால் கொழுப்பிய மோரும் சாப்பிடக்கூடாது.

24.தன்னைக்காட்டிலும் வயதானவளை விவாகம் செய்துகொள்வது ஆயுளைக் குறைக்கும்.

25.உபநயனம் இல்லாதவனுக்கும் பிரம்மச்சாரிக்கும் தீட்டே கிடையாது.

26.தனிஷ்டா நக்ஷத்திரங்கள்: அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி இதில் இறந்தால் தகுந்த சாந்தி தானம் செய்யவேண்டும்.

27.எந்தக்காரியங்களிலும் ஸ்நானம் ஆசமனீயம், பிரதக்ஷணம், நமஸ்காரம், பிராணாயாமம் இவைகளைப் பூனூலை வலமாகக் கொண்டே செய்யவேண்டும்.

28.ஸ்திரீகளை நமஸ்கரித்தால் அபிவாதனம் செய்யக்கூடாது.

29.ஆசமனம் செய்யும்போது, முதலில் பிராசனம் செய்த தீர்த்தம் உட்கொண்டபிறகு, மறுபடி மராசனம் செய்யவேண்டும்.

30.பிரம்மயக்ஞத் தைமாத்யான்னிகம் செய்த பிறகு செய்யவேண்டும்.

31.விஷ்னு பாததீர்த்தத்தைப் பானம் பண்ணின பிறகு கையைக் கழுவக்கூடாது. அதில் ஆசமனமும் செய்யக்கூடாது.

32.பரிஷேசனம் பண்ணுவதற்கு முன், உப்பு சம்பந்தமான பதார்த்தத்தைத் தொடக்கூடாது.

33.போஜன காலத்தில், தீபம் அணைந்து விட்டால், போஜன பாத்திரத்தைக் கையால் தொட்டுக் கொண்டு சூரியனை மனதால் தியானித்து, மறுபடி தீபம் ஏற்றி மிகுதி அன்னத்தைப் புஜிக்கலாம்.

34.ஸ்மார்த்தகர்மா: கர்ப்பாதானம், பும்ஸவனம், ஸீமந்தம், ஜாதகர்மம், நாமகரணம், அன்னப்பிராசனம், சௌளம், உபநயனம், ப்ராஜா பத்யம், ஸௌம்யம், ஆக்னேயம், வைச்வ தேவம், ஸ்நானம், விவாஹம்.

மேற்கண்டவற்றைக்கிரமமாக அநுஷ்டித்து வருவோர் மிக்க ஆசார சீலராவர் என்பது திண்ணம்.

**ஆதாரம்: வேத பாராயண சபா சங்கரமடம் ஆண்டு மலர் 1976**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டப வாசல்

கடவுளை நம்பி வழிபடாவிட்டால் பாவம் சேரும் என்ற அச்சத்தின் மூலம் பக்தியைத் தூண்ட முடியுமா?

தூண்டலாம். ஆனால் அது உண்மையான பக்தியை ஏற்படுத்தாது. இந்து மதத்தை பொறுத்தளவில் இப்படியான "அச்சத் தூண்டல்" மிக மிக குறைவு. நாளொன்றைக் குறிப்பிட்டு கட்டாயம் வணக்கத்திற்கு வர வேண்டும் என்ற கட்டளை இல்லை. வராது போனால் நிகழ்வாழ்வில் சில தண்டனைகளுக்கு உட்பட வேண்டும் என்ற நியதியும் இல்லை.

"என்றும், எப்பொழுதும்" என்ற விரிந்த பார்வையும்; வணக்கத்திற்கு என சில கட்டுப்பாடுகளையும் மீறி சுதந்திர போக்குடைதாக உள்ளது இந்துமதம். " பெண்கள் வணக்கத்திற்கு வரக்கூடாது என்ற ஆணாதிக்க போக்கு எம்மிடம் இல்லை.

பக்தி என்று நாம் குறிப்பிடும் போது இந்த "பக்தி" என்றால் என்ன என்பது பற்றி சிந்திக்க வேண்டி உள்ளது. தாயிடம் குழந்தைக்கு ஏற்படுவது என்ன? அன்பா? அல்லது பக்தியா? அன்புதான். இந்த அன்பின் ஆரம்பம் என்ன? தாய்தான் அவள் குழந்தையின் மீது ஆர்வம் காட்ட; காட்ட அன்பு அலைமோதி பெரும் அலையாக எழுகின்றது. அந்த அலையில் குழந்தை ஆர்ப்பரித்து எழும்போது அதற்கு தாய்மீது... தாய்மீது... எது ஏற்படுகிறது?? இதற்கு அன்பு என்று அடையாளமிட முடியுமா? இல்லை....... இல்லை...... இது அன்பை மிஞ்சியது. இதுதான் பக்தி. தாயினது அன்பு. குழந்தையினது பக்தி, எனக்கு எல்லாமே நீதான் அம்மா என்று தாயிடம் பக்தி கொள்கிறது குழந்தை.

இதே போலத்தான் நாங்கள் "ஆண்டவனின் குழந்தைகள்" என்று யோசித்துப்பாருங்கள் "மானிடர்" என்ற அடையாளத்திற்கு மூலம் எது? அதற்காக அந்த மூலப் பொருளை நினைவில் வைத்திருக்கவாவது அதன் மேல் "அன்பை செலுத்த முடியாதா???

சிலருக்கு இது ஏற்படுவதில்லை விஞ்ஞான ரீதியாக யோசிக்கிறார்கள். வெளிநாட்டு தத்துவங்களால் ஈர்க்கப்பட்டு "தங்களுக்குள் தாங்களே" வாழ்ந்துவிடுகிறார்கள். ஆகவே இவர்கள் பற்றியும் எமது மதம் எந்த கருத்தும் கொள்ளாது அது தன் போக்கிலே பரவி நிற்கின்றது.

ஆகவே எந்த வித நரகம், சொர்க்கம் என்ற பயமுறுத்தலுக்கும் உட்படாது "மூலப் பொருள்" மேல் அன்பை செலுத்த; செலுத்த எமக்கு அதன் மேல் பக்தியே உண்டாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை எப்படி தாய் மீது அன்பும், அதன் மேல் பக்தியும் கொள்கிறதோ அதே போலத்தான் நாமும் "அந்த மூலப்பொருள்" மீது பக்தி கொள்ளவேண்டும்.

● இப்படி பக்தி ஏற்படுவதால் எமக்கு என்ன நன்மை? கடவுள் வரங்களை தந்து விடுகின்றாரா?

"பக்தியால் வரங்கள் வந்தடையும்" என்று நீங்கள் குறிப்பிடுவதே பிழையான கருத்து. அப்படியான வரங்கள் மீதான பக்தி ஏற்படுமானால் அதற்கு பெயர் "பக்தி" அல்ல. "கடமையைச் செய்; பலனை எதிர்பாராதே" என்கிறது எம் மதம். கடவுளிடம் பக்தி கொள்வது வரத்திற்கல்ல. மானுட உற்பத்தியின் நன்றிக்கே. இதில் எமக்கு நல்ல தெளிவிருக்க வேண்டும்.

கோயிலுக்கு செல்கின்றோம். கற்பூரங்களை ஏற்றுகின்றோம். அர்ச்சனை, பூசை இன்னும் இன்னும்...... மனதில் தோன்றியதை கடவுளுக்கு செய்தும் விடுகின்றோம். இப்படி செய்வதில் எமக்கு கடவுளிடம் எந்த வேண்டுதலுக்கும் இரக்கக் கூடாது. "ஏகன் அநேகன்" "எல்லாம் அவனே" என்ற பொது நோக்கு எம்மில் குவிந்திருக்க வேண்டும்.

- சிசு -

## ● கொள்ளிச்சட்டி தேவைதானா?

"வீணான சடங்குகளால், பணம் பயனுள்ள வழிகளில் செலவழிக்கப்படாமல் பாழாக்கப்படுவதைத்தான் என்னால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

முற்காலத்தில் இறந்து போனவர்களைப் புதைத்து எங்கும் கல்லறைகள் எழுப்பி வந்தார்கள். இப்படியே போனால் உலகெங்கும் கல்லறைகள்தான் மிஞ்சும் என்று சிந்தித்த சீர்திருத்த வாதி ஒருவர், 'பிரேதங்களை எரிக்கலாம்' என்று கூறி தகனம் செய்யும் முறையைக் கொண்டு வந்தார்.

அம்முறை பழக்கத்துக்கு வந்த காலத்தில், சுடுகாட்டில் நெருப்பை உண்டாக்குவது கடினமான காரியமாக இருந்ததால், கொள்ளிச்சட்டி என்ற பெயரில் நெருப்பையும் சுடுகாட்டுக்கு உடன் கொண்டு சென்றார்கள்.

அதுவரை அது அர்த்தமுள்ள சடங்காக இருந்தது! இப்போது எளிதில் நெருப்பு பற்ற வைக்கத் தீப்பெட்டிகள் கண்டு பிடிக்கப்பட்டுவிட்ட பின்னரும், கொள்ளிச்சட்டியைத் தூக்கிச் செல்கிறார்களே... இது தேவைதானா, அர்த்தபுஷ்டியுள்ளது தானா என்பதைத்தான் உங்களைச் சிறிது சிந்திக்கச் சொல்கிறேன்."

'பெரியாரின்' 'காலமும் அறிவும்' கட்டுரையிலிருந்து...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## • பற்றின்மை

பற்றின்மை ஏறக்குறைய வாழ்நாள் முழுவதும் பாடுபட்டு அடையக் கூடிய ஒன்று. இந்த நிலையை அடையும்போது அன்பின் லட்சியத்தை அடைந்து விடுகிறோம். சுதந்திரர்களாகி விடுகிறோம். இயற்கையின் கட்டுக்கள் நம்மிடமிருந்து விலகி விடுகின்றன. உலகம் எப்படி உண்மையாக எப்படி இருக்கிறதோ அப்படியே நாம் காண்போம்.

அதன்பிறகு இயற்கை நம்மை எந்தச் சங்கிலியாலும் கட்டுவதில்லை. நாம் முழுக்க முழுக்க சுதந்திரர்களாகி விடுவோம். செயல்களின் பலன்களை பொருட்படுத்தமாட்டோம்.

நீ உன் குழந்தைகளுக்கு தருபனவற்றில் எதையாவது திருப்பிக் கேட்பாயா? உன் குழந்தைகளுக்காக உழைப்பது உனது கடமை, அதோடு விஷயம் முடிந்து விடுகிறது.

ஒரு குறிப்பிட்ட நபருக்கோ, நகருக்குகோ, நாட்டிற்கோ நீங்கள் எதையாவது செய்யும்போதும் இதே மனநிலையை கைக்கொள்ளுங்கள். அதாவது, எதையும் பிரதியாக எதிர்பார்க்காமல் உங்கள் குழந்தைகளுக்கு நீங்கள் செய்வது போலவே செய்யுங்கள். பிரதிபலனைப் பற்றி எந்த எண்ணமும் இல்லாமல், செய்கின்ற அனைத்தையும் உலக வேள்வியில் சமர்ப்பிக்கின்ற நிலையில் உங்களால் எப்போதும் இருக்க முடியுமானால், நீங்கள் செய்கின்ற வேலை உங்களை பற்றுக் கொள்ளச் செய்யாது. பிரதியாக எதையாவது எதிர்பார்க்கும் போதுதான் பற்று வருகிறது. அடிமைகளைப் போல் வேலை செய்தால் சுயநலமும் பற்றுமே உண்டாகிறது. மனத்தின் எஜமானர்களாகச் செயல் புரிந்தாலோ பற்றின்மையால் வரும் ஆனந்தம் கிடைக்கிறது.

## • எல்லா உயிர்களும் இறைவனுடைய கோவில்களே

நாம் பிற உயிர்களுக்கு துன்பம் செய்வோமானால், நமக்கே துன்பத்தை செய்து கொண்டவர்களாகிறோம்.

எனவே துன்பம் இல்லாமல் வாழ விரும்புவோமாயின், நாம் பிற உயிர்களுக்கு நிச்சயமாக துன்பம் செய்யக்கூடாது. இனி உயிர்களுக்கு துன்பம் செய்யாமல் இருப்பதோடு நின்று விடக்கூடாது. இன்பமும் செய்ய வேண்டும். பிற உயிர்களுக்கு இன்பம் செய்வோம் என்றால் அது நமக்கே இன்பமாக அமையும்.

எனவே, எக்காலத்துக்கும் தன்னுயிர் போல் மண்ணுயிரை நினைத்து அவற்றுக்கு வரும் இடையூற்றை நீக்கி நன்மை புரியவேண்டும். நம்முடன் பழகும் பசு, எருது, எருமை, ஆடு, கோழி போன்ற உயிர்கள் நமக்கு பல வகையிலும் உதவி புரிகின்றன.

பிற உயிர்படும் துன்பத்தைக் கண்டு கருணை செய்வதுதான் அறிவினால் ஆகும் பயன். இறைவனுடைய கருணையைப் பெற நினைக்கிற ஒவ்வொருவரும், பிற உயிர்களிடம் கருணை காட்ட வேண்டும். எல்லா உயிர்களிடத்திலும் இறைவனைப் பார்க்க வேண்டும். எல்லா உயிர்களும் இறைவனுடைய கோவில்கள்தான். •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோகருணர் கதை

- சிவமோகன் -

முன்னொரு காலத்தில் வட மதுரையில் கோகருணர் என்ற பெயருடைய இருவர் வாழ்ந்த வந்தனர். அவர்களில் ஒரு கோகருணருக்கு ஆயுட்காலம் முடிவடையும் நாள் வந்தது.

இதை அறிந்த எமன், தனது தூதுவர்களை பூலோகத்திற்கு அனுப்பி, "நீங்கள் போய் அந்த கோகருணரை இங்கே



கொண்டுவாருங்கள்" என்று கட்டளையிட்டான்.

எமன் சொல்லை தட்டாத அவனது தூதுவர்கள் பூலோகத்திற்கு வந்தனர். அவர்கள் ஆயுட்காலம் முடிந்த கோகருணனை விட்டு விட்டு தெரியாமல் ஆயுட்காலம் முடியாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மற்றொரு கோகருணரை தடாலடியாக எமலோகத்திற்கு தூக்கிச் சென்று எமன் முன்பு நிறுத்தினர்.

உண்மை நிலையை உணர்ந்து கொண்ட எமன் "நான் இங்கு கொண்டு வரச்சொன்னது இக் கோகருணர் அல்ல. ஆயுள் முடிந்த வேறொரு கோகருணன். எனவே வாழ வேண்டிய இந்த கோகருணரை பூலோகத்தில் விட்டு விட்டு அவனை இங்கே கொண்டு வாருங்கள்" என்று கட்டளையிட்டான்.

அதைக் கண்ட கோகருணர் எமன் முன்வந்து "இனி மேல் நான் பூலோகத்திற்கு போகமாட்டேன். அங்கே எனக்கு வறுமைத் தொல்லை அதிகமாக இருக்கிறது" என்று எமனிடம் கூறினார்.

உடனே எமன், அந்த கோகருணருக்கு வேண்டிய அளவு பொருள் கொடுத்தான். திருவாரூரை வழிபடுவோர் நிரயத்தை அடையார் என்றான்.

அதைத் தொடர்ந்து தூதுவர்கள் எமலோகம் வந்த கோகருணரை பூலோகத்தில் விட்டு விட்டு, பூலோகத்தில் ஆயுள் காலம் முடிந்து வாழ்ந்து கொண்டிருந்த கோகருணரை எமனிடம் கொண்டு போய்விட்டார்கள்.

எமன் தன்னுடைய தூதுவர்களைப் பார்த்து " இந்தக் கோகருணரைக் கொண்டுவரும் குறிப்பிட்ட கால எல்லையும் கடந்து விட்டது. அதனால் இவரையும் பூலோகத்தில் வாழ விட்டு விடுங்கள்" என்று கூறி அனுப்பி வைத்தான்

பின்னர் பூலோகம் வந்த இரண்டு கோகருணர்களும் திருவாரூரில் லிங்கம் அமைத்து வழிபட்டார்கள். அதனால் இருவருக்கும் வீடுபேறு கிட்டியது.

- குறுங்கதை -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org